

நாகர்கோவில் மாநகராட்சி 2வது வார்டுக்குட்பட்ட சுங்கான்கடை பகுதியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கள ஆய்வு செய்தார்.

## வாக்காளர் பட்டியலில்

# புதிதாக பெயர் சேர்க்க 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பம்!

## தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தகவல் !

சென்னை, நவ. 7 – வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் உள்ளிட்டவற்றிற்காக கடந்த 4 மற்றும் 5 ம் தேதி களில் தமிழ்நாடு முழுவதும் சிறப்பு முகாம்கள் நடை பெற்றன.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 4 லட்சத்து 7 ஆயிரத்து100 பேர் விண்ணப்பித்துள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறியுள்ளார்.

இதேபோல் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்ய 36 ஆயிரத்து 368 பேரும், திருத்தம் செய்ய 1 லட்சத்து 55 ஆயிரத்து 882 பேரும் விண்ணப்பத்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த இரண்டு நாள் சிறப்பு முகாமில் மொத்தம் 6 லட்சத்து 112 பேர் வாக்கா ளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் செய்யும் பணிக்காக விண்ணப்பித்துள்ளதாக சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம், உதகை கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் 8KM Health walk திட்டத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்து 8 கி.மீ. நடைபயணம் மேற்கொண்டனர். போது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பெண்கள் முன்னேற்றத்திற்காகவே இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டினாலும்

# இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 7- பெண்கள் முன்னேற்றத்திற்காகவே இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டினாலும் மகளிர் இடஒதுக்கீடு இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகம் என 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்

நவம்பர் 6, 2023 திங்கட்கிழமை

இழுவை இட ஒதுக்கீடு

மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது இந்தியாவை பொறுத்த வரை நீண்ட நெடிய கனவு என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கனவை நனவாக்கிட பல்வேறு அரசியல் சாயங்கள் அவ்வப்போது பூசப்பட்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி, தேர்தல் காலங்களில் எல்லாம், தாய்மார்களின் ஓட்டுக்களைப் பெற்றிட பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பதும் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விட, பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கக்கூடிய ஒன்று. 1996ம் ஆண்டு கலைஞர்

அது வருமாறு:-

மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது இந்தியாவை பொறுத்தவரை நீண்ட நெடிய கனவு என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கனவை நனவாக்கிட பல்வேறு அரசியல் சாயங்கள் அவ்வப்போது பூசப்பட்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி, தேர்தல் காலங்களில் எல்லாம், தாய்மார்களின் ஓட்டுக்களைப் பெற்றிட பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பதும் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விட, பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கக் கூடிய ஒன்று. 1996ம் ஆண்டு கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்நிலையில், நாடு முழுவதும் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க கடந்த செப்டம்பர் மாதம் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா மக்களவை, மாநிலங்களவையில் நிறை வேற்றப்பட்டு, ஜனாதிபதி ஒப்புதலும் பெறப்பட்டுவிட்டது. ஆனால், இது நடைமுறைக்கு வர வேண்டுமானால், தொகுதி மறு வரையறை செய்ய வேண்டும். அதற்கும் முன்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும். அதுவும் 2024 தேர்தலுக்கு பிறகுதான் மக்கள்தொகை, மறுவரையறை என பல ஆண்டுகள் இழுத்துக் கொண்டே போகும் நிலைதான் காணப்படுகிறது. எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கிட இப்போதைக்கு சாத்தியமில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஜெயா தாக்கூர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புதிய மனுவில், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வரும் தேர்தலுக்கு முன்பாக அமல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்த மனுவை ஒத்தி வைத்த உச்ச நீதிமன்றம், மகளிர் இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தக் கோரி மத்திய அரசை உத்தரவிடுவதற்கு சாத்தியமில்லை எனவும், மகளிர் இட ஒதுக்கீடுக்கான இடங்கள், உள்ஒதுக்கீடு ஆகியவற்றை முடிவு செய்த பின்னர் தான் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு எப்போது கிடைக்கும் என்ற கேள்விக்கு அரசியல் கட்சிகளிடம் தெளிவான பதில் இல்லை. அதிலும் பல வடமாநிலங்களில் மகளிர் இட ஒதுக்கீடு என்பது பல்வேறு அரசியல் கட்சியினருக்கு வேப்பங்காயாக உள்ளதாக தெரிகிறது. எனவே, அவர்கள் முடிந்த வரை இதை தள்ளி போடவே முயற்சி செய்யவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தியாவில் 2011ம் ஆண்டுக்கு பின்னர் இன்னமும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கவில்லை. கடந்த 2021ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த முடியாததற்கு கொரோனா பரவல் காரணமாகக் கூறப்பட்டது.

வரும் ஆண்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதலில் நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தொகுதி வரையறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தொகுதி வரையறை செய்யும் போது அதன் இறுதி அறிக்கையை வழங்க அதற்கான ஆணையம் 3 முதல் 4 ஆண்டுகள் வரை எடுத்து கொள்ளும். எனவே பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு செயல்பாட்டுக்கு வர குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் வரை ஆகலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். பெண்கள் முன்னேற்றத்திற்காக நாங்கள் இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டி கொண்டாலும், அது இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகமுள்ளன.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலைஞர் மருத்துவக் காப்பீட்டு திட்டம் மூலம்

# ஆத்தூர் தொகுதியில் நூற்றுக்கணக்கான மனித உயிர்களை காப்பாற்றியுள்ளது கழக அரசு!

## மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பேச்சு!



திண்டுக்கல், நவ.7 - ஆத்தூர் தொகுதியில் கலைஞர் மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது என ஐ.பி.செந்தில்குமார் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் முத்தமிழ் அறிஞர் - முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் கண்ணொளி வழங்கியது முதல் இன்று வரை விலையில்லா மனித உயிர்களை காப்பாற்றி வருவது திராவிட மாடல் அரசு கன்னிவாடியில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பேசினார். ஆத்தூர் தொகுதியில் கலைஞர் மருத்துவக் காப்பீட்டு திட்டம் மூலம் நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது என ஐ.பி.செந்தில்குமார் பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பாக கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச மருத்துவ முகாம் கன்னிவாடி அரசு சமுதாய நல திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மருத்துவ முகாமிற்கு மாவட்ட மருத்தவர் அணி அமைப்பாளர் எஸ்.எம்.அமிர்தகடேஸ்வர், தலைமை தாங்கினார். ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம. கணேசன், மாணவரணி அமைப்பாளர் கி.பிரபாகரன், பேரூராட்சி மன்றத் தலைவர் தனலெட்சுமி சண்முகம், பேரூர் கழக செயலாளர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மருத்துவர் அணி தலைவர்; அப்துல்ஹமீது, துணைத் தலைவர் எம்.ஹேமலதா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், பழனி சட்டமன்ற திமுக உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் மருத்துவமனையை துவக்கிவைத்து விட்டு பேசுகையில் தமிழகத்தில் வாழும் மனித உயிர்களை காப்பாற்றுவதில் தி.மு.க. இயக்கத்திற்கு தனி இடம் உண்டு. காரணம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு முத்தமிழ் அறிஞர் மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு கண்ணொளி வழங்கிய திட்டத்தில் தொடங்கி, கலைஞர் மருத்துவ காப்பீட்டு திட்டம், 108 ஆம்புலன்ஸ் வசதி போன்ற திட்டங்களை செயல்படுத்தியதால், விலையில்லா மனித உயிர்கள் காப்பாற்ற பட்டுள்ளனர். கடந்த பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்பு ஆத்தூர் தொகுதியின் செல்லப் பிள்ளையாக இருக்கும் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி ஐயா அவர்கள் கலைஞர் ஆட்சியின்போது சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தார்.

அப்போது கலைஞரின் மருத்துவக் காப்பீட்டு திட்டம் மூலம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் விபத்தில் சிக்கியவர்களை கட்சி, மத பேதமின்றி காப்பாற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திமுக ஆட்சியில் இல்லாபோதும், தொகுதியில் உள்ள திமுக தொண்டருக்கு விபத்து என்று கேள்வி பட்டவுடன் விரைந்து வந்து, அவர்களின் உயிர்களை காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளார். கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது கலைஞர் மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் மருத்துவ உயர் சிகிச்சை பெறும் அளவிற்கு இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் வாழும் மக்களின் நலன் கருதி, மருவத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்தி வருவது திமுக என்ற ஒரே இயக்கம்தான் என்றார். இன்று தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் இலவச மருத்துவ முகாமை நடத்தும் கிழக்கு மாவட்ட மருத்துவ அணியை மனதார பாராட்டுகிறேன். இது போல பல மருத்துவ முகாம்களை மருத்துவ அணியினர் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி இராமன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் சகிலா ராஜா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரெ.பார்த்தசாரதி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்.முருகன், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள் மருத்துவர்கள்.வி.வீரவிக்னேஷ், நிஜாமுதீன், ரெட்டியார் சத்திரம் வட்டார காங்கிரஸ் தலைவர் முருகானந்தம், ஆத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காங்கேயன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் மூர்த்தி, ரூபன் டென்சிங்ராஜா, கன்னிவாடி பேரூர் கழக மாவட்டப் பிரதிநிதிகள் ஜீவானந்தம், பெருமாள், ஒன்றியபிரதிநிதி சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் சரண்யன்மதிவாணன் நன்றி கூறினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி நடத்திய இலவச மருத்துவ முகாமில் கன்னிவாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள்!

## தமிழரசி எம்.எல்.ஏ. - கழகத்தினர் பங்கேற்பு!

சிவகங்கை. நவம்பர் 7 . இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் கடந்த 4,5 ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் உள்ள வாக்குச் சாவடிகளில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்களில் கழகத்தலைவர் முதல்வர் தளபதி உத்தரவின் பேரில் மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் ஆலோசனையின் பேரில் கடந்த இரண்டு தினங்களாக புதிதாக வாக்காளர்களை சேர்த்தல், நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டார்கள்.

**இளையாங்குடி**

இளையாங்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ .முன்னாள் எம்.எல்.ஏ .சுப. மதியரசன், பேரூராட்சி தலைவர். பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலை வர் இபுராகீம், கூட்டுறவு சங்கத்தலைவர் சுப.தமிழரசன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கனி, காதர் பாட்சா, ரவூப், பைரோஸ்கான், ஹைதர் அலி மானாமதுரை தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கண்ணன் மற்றும் பாகமுகவர்களுடன் கழகத்தினர் சென்று வாக்காளர்களை சேர்த்தார்கள்.

**மானாமதுரை**

மானாமதுரையில் நகரச் செயலாளர் க.பொன்னுச் சாமி உட்பட நகர் கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாலசுந்தரம் மற்றும் நிர்வாகிகளுடன் சென்று புதிய வாக்காளர்களை சேர்த்தார்கள். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பாக முகவர்களுடன் சென்று புதிதாக வாக்காளர்களை சேர்த்தார்கள்.

**சிவகங்கை**

சிவகங்கை நகர் 27 வார்டுகளுக்கும் நகர்கழகச் செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் நிர்வாகிகள் அந்தந்த பாகமுகவர்களுடன் சென்று புதிய வாக்காளர்களை சேர்த்தார்கள்.

**காரைக்குடி**

காரைக்குடி நகரில் நகரச் செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் நகர் நிர்வாகிகள் 34 வார்டுகளுக்கும் சென்று புதிதாக வாக்காளர்களை சேர்த்தார்கள்.

**தேவகோட்டை**

தேவகோட்டை நகரில் 34 வார்டுகளிலும் நகர் கழகச் செயலாளர் பெரி. பாலா தலைமையில் நகர நிர்வாகிகள் அந்தந்த முகாமுக்கு சென்று புதிதாக வாக்காளர்களை சேர்த்தார்கள்.

இதே போல் 12 ஒன்றியங்கள் 11 பேரூராட்சிகள் நான்கு நகராட்சிகளில் அந்தந்த மாவட்ட கழக ,ஒன்றிய கழக, நகரக் கழக நிர்வாகிகள், வாக்காளர் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். நிர்வாகிகளுடன் அந்தந்த பாகமுகவர்கள் தகவல் தொழில்நுட்ப அணியினரும் கலந்து கொண்டார்கள்.

## அனைத்துக் கட்சி ரயில் மறியல் போராட்டத்தினால்

# சிவகங்கை ரயில் நிலையத்தில் லிப்ட் அமைக்கும் பணிகள்!

## சிவகங்கை நகர்மன்றத் தலைவர் பார்வையிட்டார்!

சிவகங்கை, நவ. 7 - செப்டம்பர் 23ஆம் தேதிமாவட்ட தலைநகர் சிவகங்கை வழியாக செல்லும் பல்வேறு ரயில்கள் நின்று செல்ல வேண்டும் டிஜிட்டல் போர்டு, கழிப்பறை வசதி, ராமேஸ்வரம் - சென்னை பகல் நேர ரயில் விடக்கோரி உட்பட 16அம்சக்கோரிக்கைகளை ஒன்றிய அரசு ரயில்வே துறை. நிறைவேற்ற வலியுறுத்தி சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் அனைத்துக் கட்சியினர் பல்வேறு அமைப்புகள் பங்கேற்ற ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அக்டோபர் மாதம் 10ம்தேதி புது தில்லியில் நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் அனைத்துக் கட்சி நிர்வாகிகள் ஒன்றிய ரயில்வே இணை அமைச்சரை நேரில் சந்தித்து 16அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்றி தருமாறு வலியுறுத்தினார்கள்.

இதன் அடிப்படையில் முதல் கட்டமாக லிப்ட் வைக்கும் பணி,கழிப்பறை கட்டும்பணி, நவீன டிஜிட்டல் போர்டு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த பணிகளை சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.ஏம்.துரை ஆனந்த் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அயூப்கான், ஜெயகாந்தன், சரவணன், விஜயகுமார், சண்முகராஜன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மகேஷ், கண்ணன் ஆகியோர் பார்வையிட்டார்கள்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு திறப்பு விழா மற்றும் புதிதாக கட்டப்படவுள்ள கட்டிடங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் அடிக்கல் நாட்டினார். உடன் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், ஊராட்சி மன்றக் குழு தலைவர் தங்கவேல் மற்றும் கிளைச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில் மாநகராட்சி 2வது வார்டுக்குட்பட்ட

# சுங்கான்கடை பகுதியில் கள ஆய்வு!

## மேயர் ரெ. மகேஷ் மேற்கொண்டார்!

நாகர்கோவில், நவ. 7 - கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர்- நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தினமும் காலை ஆய்வு மேற்கொள்வது வழக்கம். அந்த வகையில் நேற்று (06.11.2023 - திங்கட்கிழமை) காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி இரண்டாவது வார்டுக்குட்பட்ட சுங்கான்கடை பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் சுங்கான்கடை பகுதியிலுள்ள அரசு தொடக்கப்பள்ளியில் சேதமடைந்த சுற்றுச்சுவரை பார்வையிட்டு அதனை சரி செய்யவும், பாலிடெக்னிக் கல்லூரி முன்புள்ள மழைநீர் வடிகால் ஓடையில் மண் அடைப்பு ஏற்பட்டுள்ளது அதனை மாற்றவும், பழுதுபட்டுள்ள குடிநீர் வால்வு மாற்றி அமைக்கவும், பொதிகை நகர் தெருவில் ஊற்று தண்ணீர் சாலையில் செல்வதால் பாதையில் பாசி உருவாகி பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது அதனை உடனே சரி செய்யவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

பொதுபணித்துறைக்கு சொந்தமான குளத்தில் விழுந்து கிடக்கும் மரத்தை அதற்றவும், புனித சவேரியார் பொறியியல் கல்லூரிக்கு செல்லும் சாலையில் ரோட்டின் கரை உடைவு ஏற்பட்டுள்ளது அதனை சீரமைத்து ரோட்டின் கரையில் தடுப்புச்சுவர் அமைக்கவும், கௌரி சங்கர் ஹோட்டல் எதிர்பக்கம் ரோட்டின் ஆக்கிரமிப்பு பகுதி இடத்தை ஆய்வு செய்து அவ்விடத்தில் பேருந்து நிறுத்தம் அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வில் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், மாநகர நல அலுவலர் டாக்டர். ராம்குமார், நகரமைப்பு ஆய்வாளர் சந்தோஷ், சுகாதார ஆய்வாளர் சத்தியராஜ், மாநகராட்சி அதிகாரிகள், மண்டல தலைவர் ஜவகர், செல்வகுமார், பகுதி செயலாளர் ஷேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## திருநெல்வேலி - தென்காசி மாவட்ட முரசொலி நிருபர்

# கோமதி நாயகம் சகோதரர் சபரிகிரி நாதன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நெல்லை, நவ. 7- திருநெல்வேலி - தென்காசி மாவட்ட முரசொலி நிருபர் கோமதி நாயகத்தின் சகோதரர் சபரிகிரி நாதன் (வயது 56) உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் (5.11.2023) மாலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று (6.11.2023) மாலை திருநெல்வேலி டவுன் கருப்பந்துறையில் உள்ள இடுகாட்டில் நடைபெற்றன.



தி.மு.க. இளைஞரணி இராமநாதபுரம் மாவட்டம் மண்டலம் 8 ஒன்றிய நகர், பேரூர், கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் பாரதி நகர் வைஸ்ராய் மஹாலில் நடைபெற்றது. நேர்காணல் நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். இதில் மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ். ஜோயல், ஏ.என். இன்பாரகு, நா. இளையராஜா, பா. அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், கா.பிரபு, பி.எஸ், சீனிவாசன், ஜி.பிரதீப்ராஜா, சி.ஆனந்தகுமார். அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் செய்தனர். இந்நிகழ்ச்சியை சம்பத் ராஜா கே.ரமேஷ் கண்ணா, சி. கே. குமரகுரு, சன் சம்பத்குமார், ஆர். எஸ். சத்தியேந்திரன், ஆர் .கே. கோபிநாத், எஸ். தௌபிக் ரஹ்மான் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.